**1. பண்புத்தொகை**

நிறம், வடிவம், சுவை, அளவு, குணம், எண்ணிக்கை ஆகியவற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும், அது தழுவி நிற்கும் பெயர் சொல்லுக்கும் இடையில் **'மை'** விகுதியும், ஆகிய, ஆன என்னும் பண்பு உறுப்புகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

- செங்காந்தள் - செம்மை + காந்தல் (நிறம்)
- வட்டத் தொட்டி – வட்டம் + தொட்டி ( வடிவம்)
- இன்மொழி - இனிமை + மொழி ( சுவை)
- நெடுந்தேர் - நெடுமை + தேர் (அளவு)
- நன்செய் - நன்மை + செய் ( குணம்)
- மூவேந்தர் - மூன்று + வேந்தர்( எண்ணிக்கை)

**2. வினைத்தொகை**

காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க வினைப் பகுதியை தொடர்ந்து ஒரு பெயர் அமைந்து நிற்பது வினைத்தொகை ஆகும். காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை எனப்படுகிறது. இது மூன்று காலங்களையும் உணர்த்தி வரும்.

**எடுத்துக்காட்டு :**

| வினைத் தொகை | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
|---|---|---|---|
| வீசுத் தென்றல் | வீசிய தென்றல் | வீசுகின்ற தென்றல் | வீசும் தென்றல் |
| கொல் களிறு | கொன்ற களிறு | கொள்கின்ற களிறு | கொல்லும் களிறு |

**3. பெயரெச்சம்**

முற்றுப்பெறாத வினையானது ஒரு பெயர்ச்சொல்லை கொண்டு முடிவது பெயரெச்சம் எனப்படும். **'அ'** என்ற விகுதியைக் கொண்டு இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் உணர்த்தும்.

**எடுத்துக்காட்டு :**

- படித்த பையன் - இறந்த காலம் (த் +அ)
- படிக்கின்ற பையன் - நிகழ்காலம் (ற் +அ)

**'உம்'** என்ற விகுதியை கொண்டு எதிர் காலத்தை உணர்த்தும்.

- படிக்கும் பையன் - எதிர்காலம் (க்+உம்)

**4. வினையெச்சம்**

முற்றுப்பெறாத வினையானது ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிவது வினையெச்சம் ஆகும்.

**எடுத்துக்காட்டு : பாடி மகிழ்ந்தனர்.**

இது மூன்று காலங்களையும் உணர்த்தி நிற்கும்.

| | |
|---|---|
| படித்து முடித்தான் | இறந்த காலம் |
| படிக்க செல்கிறான் | நிகழ்காலம் |
| கண்டால் மகிழ்வான் | எதிர்காலம் |

**5. வியங்கோள் வினைமுற்று**

வாழ்த்துதல், வைதல், வேண்டல் விதித்தல் பொருளில் வரும் வினைமுற்று ஆகும். இது காலம் காட்டாது. இது 'க' 'இய' 'இயர்' என்ற விதிகளுடன் முடியும்.

**எடுத்துக்காட்டு :** வாழ்க, வாழி, வாழிய வாழியியர், ஒழிக.

**6. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்**

ஓர் எதிர்மறைப் பெயரெச்சத்தின் கடைசி எழுத்து கெட்டுவிடும். இது 'ஆ' என்ற ஓசையுடன் முடியும்.

**எடுத்துக்காட்டு :**

- எய்தாப் பழி - தா = த் +ஆ
- ஏமரா மன்னன் - ரா = ர் +ஆ

**7. உவமைத்தொகை**

உவமைக்கும், பொருளுக்கும் (உவமேயும்) இடையில் உவம உருபு மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.

**எடுத்துக்காட்டு :** மலர்க்கை (மலர் போன்ற கை)

| பூக்கை | முத்துப்பல் | பூஞ்சேகை | தாமரை நயனம் |
|---|---|---|---|
| மலரடி | மலர்சேவடி | கல்திரள் தோள் | பூங்கொடி |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**8. உருவகம்**

உவமைத் தொகையை முன் பின்னாக மாற்றுவது, உவமையைப் பொருள் மேல் ஏற்று இடையில் 'ஆகிய' என்ற சொல் மறைந்து வருவது.

**எடுத்துக்காட்டு : காலக்கழுதை, கோபத்தீ**

| | | | |
|---|---|---|---|
| கன்னியா குமரி | மண்ணுலகம் | தவமணி மார்பன், | தாமரை நயனம் |

**9. உம்மைத்தொகை**

இரு சொற்களுக்கு இடையிலும், இறுதியிலும், 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மை தொகையாகும்.

**எடுத்துக்காட்டு :** தாய்சேய், அண்ணன்தம்பி

மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் தாயும் சேயும், அண்ணனும் தம்பியும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன.

**10. எண்ணும்மை**

இரு சொற்களுக்கு இடையிலும், இறுதியிலும் **'உம்'** என்னும் இடைச்சொல் வெளிப்படையாக வருவது எண்ணும்மை ஆகும்.

**எடுத்துக்காட்டு :** பாடுவதும் கேட்பதும், இல்லறனும் துறவறனும்

**11. வினையாலணையும் பெயர்**

வினைமுற்று வினையை குறிக்காமல் வினை செய்தவரை குறித்தால் அது வினையாலணையும் பெயர் எனப்படும் இது தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் இறந்த காலம் நிகழ் காலம் எதிர் காலம் ஆகிய மூன்று காலங்களிலும் அமைந்து வரும்.

**எடுத்துக்காட்டு :**

- அகழ்ந்தாரை - இறந்த காலம்
- அகழ்கின்றாரை - நிகழ் காலம்
- அகழ்வாரை - எதிர்காலம்
- **வந்தவர்** அவர்தான்
- **பொறுத்தார்** பூமி ஆள்வார்

**12. தொழிற்பெயர்**

ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றை குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயராகும்.

**எடுத்துக்காட்டு : ஈதல், நடத்தல்**

**13. உரிச்சொல் தொடர்**

தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாத சால, உறு, தவ, நனி, கூர், கழி, வான் மா, தட, வை, மழ, கடி போன்ற உரிச்சொற்கள் உடன் பெயரோ, வினையோ தொடர்ந்து வருவது உரிச்சொல் தொடராகும்.

**எடுத்துக்காட்டு :** தடக்கை, மாமலர், சாலச் சிறந்தது.

**14. அடுக்குத்தொடர்**

இரண்டு அல்லது மூன்று முறை அர்த்தமுள்ள சொற்கள் அடிக்கு தொடர்ந்து வருவதும், பிரித்தால் பொருள் தருவதும் அடுக்குத்தொடர் ஆகும்.

**எடுத்துக்காட்டு :** ஊழ் ஊழ், எவ்வவை, வா வா, நன்று நன்று

**15. விளித்தொடர்**

ஒருவரை அழைத்தற் பொருட்டு விளிக்கும் தொடர் விளித்தொடர் எனப்படும். விளியுடன் வினைத் தொடர்வது விளித்தொடர் ஆகும். **எடுத்துக்காட்டு :** நண்பா எழுது, புலவீர்

**16. வேற்றுமைத்தொகை**

ஒரு தொடரில் வேற்றுமை உருபுகளுள் **(ஐ, ஆல், கு, ன், அது, கண்)** ஒன்று மறைந்து வந்து பொருள் உணர்த்துவது.

**எடுத்துக்காட்டு** : மதுரை சென்றார்
(மதுரைக்குச் சென்றார்)



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| மொழி கற்றான் | இரண்டாம் வேற்றுமை தொகை |
| தலைவணங்கினான் | மூன்றாம் வேற்றுமை தொகை |
| கல்லூரி சென்றாள் | நான்காம் வேற்றுமை தொகை |
| கண் கடை பார்வை மலை அருவி | ஏழாம் வேற்றுமை தொகை |
| கண்பார்வை | வேற்றுமைத்தொகை |
| பாற்சுவை | ஏழாம் வேற்றுமைத்தொகை |

**17. செய்யுளிசை அளபெடை**

செய்யுளில் ஓசை குறையும்போது உயிர் நெடில் எழுத்துக்கள் தன் ஓசையில் மிகுந்து ஒலிக்கும் அப்படி ஒலிக்கும் போது அதற்கு இனமான குற்ற எழுத்து அருகில் எழுதப்படும் இது இசைநிறை அளபெடை எனவும் அழைக்கப்படும்.

**எடுத்துக்காட்டு :**

| | |
|---|---|
| ஓஒதல் வேண்டும் | மொழி முதல் |
| உறா அர்க்கு ஒரு நோய் | மொழி இடை |
| நல்ல படா அறை | மொழி இறுதி |

**18. சொல்லிசை அளபெடை**

செய்யுளில் பெயர்ச்சொல் எச்சச் சொல்லாக மாறி அளபெடுப்பது ஆகும். **'இ'** எழுத்து கடைசியில் வரும். **எடுத்துக்காட்டு :**

| | |
|---|---|
| உரனசை | விருப்பம் |
| உரனசைஇ | விரும்பி |

**19. இன்னிசை அளபெடை**

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிமைக்காக குறில் நெடிலாய் மாறி அளபெடுப்பது ஆகும். இது "தூஉம்" என்று முடியும்.

**எடுத்துக்காட்டு :**

- கொடுப்பதூஉம்
- உண்பதூஉம்
- துய்ப்பதூஉம்.

**20. இரு பெயரொட்டுப் பண்புத்தொகை**

சிறப்பு பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும், நின்று இடையில் "ஆகிய" என்னும் பண்பு உருபு தொக்கி வருவது இரு பெயரொட்டு பண்புத்தொகை எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

- சாரைப்பாம்பு
- மார்கழி திங்கள்
- பருத்தி நூல்
- தமிழ் மொழி

**21. இரட்டைக்கிளவி**

பொருள் இல்லாத ஒரே சொல் இரண்டு முறை அடுக்கி வந்து பொருள் தருவது இரட்டைக்கிளவி ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

- சலசலவென்று தண்ணீர் ஓடியது
- மடமடவென மரம் முறிந்தது
- கலகலவென்று சிரித்தாள்

**22. மரூஉ**

எழுத்துகள் சிதைந்து உருமாறி வழங்கி வருவது மரூஉ ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

| இயற்சொல் | மரூஉ சொல் |
|---|---|
| தஞ்சாவூர் | தஞ்சை |
| புதுச்சேரி | புதுவை |
| கும்பகோணம் | குடந்தை |
| எம் தந்தாய் | எந்தாய். |

**23. செய்யுள் விகாரம்**

செய்யுளில் அசை, சீர், தளை, அடி, தொடை முதலியவற்றில் சில இடங்களில் ஓர் எழுத்து மாறுபட்டோ அல்லது ஓர் எழுத்து குறைந்தோ காணப்படுவது செய்யுள் விகாரம் எனப்படும். இது ஒன்பது வகையாகும். வலித்தல் விகாரம், மெலித்தல் விகாரம், நீட்டல் விகாரம், குறுக்கல் விகாரம், விரித்தல் விகாரம், தொகுத்தல் விகாரம், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை.

**எடுத்துக்காட்டு :**

- காக்கென்று - காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம்.

**24. இடைக்குறை விகாரம்**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

ஓர் சொல்லின் இடையில் ஓர் எழுத்து குறைந்தாலும் பொருள் மாறாமல் வருவது இடைக்குறை விகாரம் எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

- கண்ணீர் –(கண்ணீர் என்பதன் இடை குறை)
- கடிந்ததனை - (என்னை என்பதன் இடை குறை)
- உவம்- உவ்வம் என்பதன் இடைக்குறை

**25. அன்மொழித்தொகை**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுக்கு புறத்தை அல்லாத சில வேறு சொற்கள் (மறைந்து) நின்று பொருள் தருவது அன்மொழித்தொகை எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

- சிவப்பு சட்டை வந்தார்
- பூங்குழல் வந்தாள்.
- முறுக்கு மீசை வந்தார்.

**26. முற்றும்மை**

முற்றுப் பொருளை தருவதற்காக வருகின்ற **"உம்"** முற்றுமை ஆகும். முழுவதும் என்னும் பொருளைத் தரும். **எடுத்துக்காட்டு :** யாண்டும்

**27. போலி**

ஒரு சொல்லில் உள்ள ஓர் எழுத்தோ அல்லது பல எழுத்துகளோ மாறி அமைந்து பொருள் மாறாமல் இருப்பவை **"போலி"** எனப்படும்.

| இயற்சொல் | போலி | போலியின் வகை |
|---|---|---|
| மஞ்சு | மைஞ்சு | முதற் போலி |
| அரசன் | அரைசன் | இடைப்போலி |
| பந்தல் | பந்தர் | கடைப்போலி |
| ஐந்து | அஞ்சு | முற்றுப்போலி |

**28. வேற்றுமை உருபும், பயனும் உடன் தொக்க தொகை**

ஒரு தொடரில் வேற்றுமை உருபும், அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து வருவது வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

| | |
|---|---|
| மனச்சுமை | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| தற்காத்து | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| கைமுறை | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |

**29. தன்மை பன்மை /ஒருமை வினைமுற்று**

**அம் , ஆம் , எம் , ஓம் –** விகுதிகளுடன் முடியும் வினைமுற்று தன்மை பன்மை வினைமுற்று. **அன், ஆன் , என், ஏன்** விகுதிகளுடன் முடியும் வினைமுற்று தன்மை ஒருமை வினைமுற்று.

**எடுத்துக்காட்டு**

- துடைத்தேன், வாழ்ந்தேன் – தன்மை ஒருமை வினைமுற்று
- வாழ்வோம் – தன்மை பன்மை வினைமுற்று

| | | | |
|---|---|---|---|
| வாழ்த்துவம் | கீறுவோம் | முந்துற்றோம் | கேட்டனம் |
| பாடுகிறோம் | கூறுகிறோம் | நாட்டுவோம் | |

**30. எதிர்மறை தொழிற்பெயர்**

எதிர்மறை பொருளில் வருவது எதிர்மறை தொழிற்பெயர் ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

- நடவாமை
- கொல்லாமை

**31. முதனிலை தொழிற்பெயர்**

விகுதிபெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் முதனிலை தொழிற்பெயர் ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

- தட்டு
- உரை
- அடி


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**32. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்**

இவை விகுதிபெறாமல் முதனிலைத் திரிந்து வரும் தொழிற்பெயர்கள் ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

| தொழிற் பெயர் | முதனிலைத் தொழிற்பெயர் | முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் |
|---|---|---|
| கெடுதல் | கெடு | கேடு |
| சுடுதல் | சுடு | சூடு |

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in